# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தொலைநிலைக்கல்வித் தேர்வுகள் தொ.பேசி எண் : 04362-227845

முனைவர்.தி.சிவகுமார்

கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

நாள்: 30.04.2021

## சுற்றறிக்கை

தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக்கல்வி இயக்ககம் வாயிலாக இளநிலை கல்விப் பயிலும் மாணவர்களுக்கு திசம்பர் 2020 க்கான தேர்வுகள் (இணையம் வழியாக) நடத்தப்பட உள்ளன. தேர்வு எழுதும் மாணவர்கள் உரிய கட்டணம் செலுத்தி தேர்விற்கு விண்ணப்பிக்கலாம்.

| ஆண்டு- திசம்பர் 2020 | இளநிலை பாடப்பிரிவுகள் | தாள்1க்கு ரூ.200 வீதம் | செய்முறை-1 ரூ.250 வீதம் | ஆய்வேடு கட்டணம் | பிற கட்டணங்கள் | கூடுதல் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| முதலாமாண்டு/ இரண்டாமாண்டு | தமிழ், தமிழ் இலக்கியம், வரலாறு, வணிகவியல், வணிகமேலாண்மை, ஆங்கிலம்,கணிதம், உளவியல் | 1000 | - | - | 400 | 1400 |
| | தாவரவியல் | 800 | 500 | - | 400 | 1700 |
| | தமிழிசை, புவியியல் | 800 | 250 | - | 400 | 1450 |
| | பி.சி.ஏ. | 1400 | 250 | - | 400 | 2050 |
| மூன்றாமாண்டு | தமிழ், தமிழ் இலக்கியம், வரலாறு, வணிகவியல், வணிகமேலாண்மை, ஆங்கிலம், கணிதம் | 1000 | - | - | 1200 | 2200 |
| | உளவியல் | 800 | 250 | - | 1200 | 2250 |
| | தமிழிசை | 400 | 750 | - | 1200 | 2350 |
| | புவியியல், தொடுசிகிச்சை அறிவியல் | 600 | 500 | - | 1200 | 2300 |
| | பி.சி.ஏ. | 1000 | 500 | 300 | 1200 | 3000 |
| ஒரு வருடம் | நூலகம் மற்றும் தகவலறிவியல் | 1200 | 500 | - | 700 | 2400 |

முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் தாமதக் கட்டணமின்றி விண்ணப்பிக்க இறுதி நாள் 15,05,2021
தண்டக்கட்டணம் ரூ-500/= கூடுதலாகச் செலுத்தி விண்ணப்பிக்க இறுதி நாள் 20.05,2021
உரிய காலக்கெடுவுக்குள் கிடைக்கப்பெறா விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்பட இயலாது.

தேர்வுக்கட்டணத்தை பேங்க் ஆப் இந்தியா வங்கிக் கிளை கணக்கு எண்ணில் (A/C.No.814510110001726) உரிய மஞ்சள் நிற நான்கு படிகள் கொண்ட செலுத்துச்சீட்டு வழியோ அல்லது www.tamiluniversity.ac.in மூலம் SBI Online Payment வழியோ செலுத்தலாம். தேர்வுக்கட்டணம் செலுத்தியதற்கான இரசீதியினை விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைக்கவேண்டும். உரிய தேர்வுக் கட்டணமின்றிப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா. ஒரு முறை செலுத்திய தேர்வுக் கட்டணம் எந்தவொரு நிலையிலும் மீள வழங்கவோ அடுத்துவரும் தேர்வுக்கு ஈடு செய்யவோ இயலாது.

கல்வி ஆண்டிற்கானத் தேர்விற்கு முதன்முதலில் விண்ணப்பிக்கும்பொழுது, அவ்வாண்டின் அனைத்துப் பாடங்களுக்கும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

தேர்வு விண்ணப்பத்தில் தங்கள் சேர்க்கை எண், பெயர் மற்றும் தலைப்பெழுத்தைத் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் +2 மதிப்பெண் / மாற்றுச் சான்றிதழ் இணைத்தனுப்ப வேண்டும்

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவிகள் தேர்வு எழுதுவதற்குத் தனியாள் (Scriber) தேவைப்படின் முன்கூட்டியே தனியாளின் (Scriber) தன்விவரக்குறிப்பு மற்றும் புகைப்படத்துடன் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலகத்துக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். இவர்களின் கல்வித்தகுதி +2 படிப்பிற்கு மிகாமல் இருத்தல் அவசியம்.

தேர்வு முடிவுகள் வெளியான 30 நாட்களுக்குள் மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம். தேர்வு முடிவுகளை www.tamiluniversity.ac.in என்ற இணையத்தில் பார்வையிடலாம்.

இணைய வழியாக தேர்வுகள் நடத்துவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும்

கூ.தே.க.அலுவலர்

இணைப்பு: தேர்வு விண்ணப்பப் படிவம்.

பெறுநர்

1. தொடர்புடைய மாணவர்கள்.